ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2302/31 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21

*2302/31 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சில் இருந்து,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 20.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2022 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதிய இலக்கம் 2231/18 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்கு விதிகள் , இதன் மூலம் திருத்தி அமைக்கப்படுகின்றன.

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்கு விதிகளில், 8 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டதோ, அவ் ஒழுங்கு விதிகளில் **I ஆவது உப அட்டவணையில்** பட்டியல்படுத்தப்பட்டுள்ள உடைத்த அரிசி **(எச். எஸ். குறியீடு 1006.40.00)**, விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பூரண சிபாரிசின் பேரில், கால்நடைகள் உணவு உற்பத்திக்காக உணவு மேம்பாட்டுச் சபையின் மூலம் அல்லது உணவு உற்பத்திக்காக உணவு மேம்பாட்டுச் சபைக்காக இறக்குமதி செய்வதற்காக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் மொத்த அளவு 25,000 மெட்ரிக் தொன்களுக்காக மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.

3. இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் மேலே இலக்கம் 2.1 கொண்ட ஒழுங்கு விதியினை மோசடி செய்கின்ற எந்தவொரு இறக்குமதி தொடர்பாகவும் விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் ஆலோசனையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இவ் ஒழுங்குவிதிகள் வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அனுமதிப் பத்திரதார வங்கிகளுக்கு "செயற்பாட்டு ஆலோசனை" வழங்கப்படுகின்றது.

EOG 10 - 0238

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.